மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

107—

கல்வி அலுவலகம்

***29425—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரை மையமாகக் கொண்டு முதன்மைக் கல்வி அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 20-3-2008 அன்று சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில், திருப்பூரைத் தலைநகராகக்கொண்டு ஒரு புதிய மாவட்டம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இந்த மாவட்டம் அமைக்கப்பட்ட பின்னர், மாவட்டத்திற்கெனத் தனியாக ஒரு முதன்மைக் கல்வி அலுவலகம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. தற்சமயம் திருப்பூரில் தொடக்க உதவிக் கல்வி அலுவலர் அலுவலகம் ஒன்று மட்டும் இருக்கிறது. திருப்பூர் நகர, ஒன்றியப் பகுதிகளில் சற்றேறக்குறைய 170 நடுநிலை, தொடக்கப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. 1,400-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் அதில் பணியாற்றுகிறார்கள். ஆகவே, ஒரேயொரு உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் அந்தப் பள்ளிகளையெல்லாம் கண்காணிப்பதிலே நடைமுறையில் மிகப் பெரிய சாத்தியம் இல்லாத நிலை தொடர்ந்துகொண்டிருக்கிறது. இதனால், கல்வித் தரம்கூட பாதிக்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், இந்த ஆண்டு அந்த உதவிக் கல்வி அலுவலர் அலுவலகம், திருப்பூரை இரண்டாகப் பிரித்து, வடக்கு,

2008 ஏப்ரல் 16]

தெற்கு என்று உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே திருப்பூர் கல்வி மாவட்டத்தில்தான் அதிக அளவு பள்ளிகள் இருக்கின்றன். ஏறத்தாழ 1,100-க்கும் மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. 11 சதவிகிதப் பள்ளிகள், கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பள்ளிகள் திருப்பூர் கல்வி மாவட்டத்திலே இருக்கின்றன. 8 ஒன்றியப் பகுதிகள் அந்தக் கல்வி மாவட்டத்தின்கீழே வருகின்றன. எனவே, புதிதாக இந்த மாவட்டம் தொடங்கப்படுகிறபோது, முதன்மைக் கல்வி அலுவலகம் அமைக்கிறபோது, அங்கே இருக்கக்கூடிய கல்வி அமைப்பினுடைய நிர்வாக வசதிகளை reorganise செய்கின்ற ஒரு வாய்ப்பு வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்க இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிகள் நிறைவடைய ஓராண்டு காலம் வரையிலும்கூட ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, இந்த முதன்மைக் கல்வி அலுவலகத்தை, நீங்கள் சொன்னபடி மாவட்டம் உருவாகிறபோது அமைப்பதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், இந்த உதவிக் கல்வி அலுவலர் அலுவலகம் என்பதை இந்த ஆண்டிலேயே தொடங்க, உங்களுடைய மானியக் கோரிக்கையிலே நீங்கள் அறிவித்தால் உதவியாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்; அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளைக்குப் பெண் பார்க்கவே இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம், பேரனுக்குப் பெயர் வைப்பதை உரிய காலத்திலே பரிசீலிக்கலாம். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலகங்கள், தொடக்கக் கல்வி அலுவலகங்கள் எல்லாம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. பெருந்திட்ட வளாகத்திலே 200 ஏக்கருக்கும் மேலே இடம் இருக்கிற காரணத்தால், அதிலே ஒரு முதன்மைக் கல்வி அலுவலகம் மற்றும் அனைத்துக் கல்வி அலுவலகங்கள் வருகின்ற வகையில் அதற்கான கட்டடங்களைக் கட்டித் தர ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்துத் தனியாக வினா எழுப்பினால், நான் விளக்கமான விடையினைச் சொல்வதற்கு வாய்ப்பாக அமையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் பகுதிக்கான மாவட்டக் கல்வி அலுவலகம் கடந்த பல ஆண்டுகளாக சங்ககிரி கல்வி அலுவலகத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கல்வி அலுவலகம் ஓமலூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்க வேண்டுமென்று நான் வினா எழுப்பி இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் கொடுத்திருக்கிறேன். எனவே, தாலுகா தலைமையிடமாக இருக்கிற காரணத்தாலே, அங்கே அதிகப் பள்ளிகள் இருக்கிற காரணத்தாலே, ஓமலூரைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டக் கல்வி அலுவலகம் இயங்குவதற்கு ஆவன செய்வாரா என்று தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அத்தகைய செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்

அவர்கள் நேரிலே என்னிடத்திலே வலியுறுத்தி இருக்கிறார்; இந்த அவையிலும் இது குறித்து இப்போது வினா எழுப்பி இருக்கிறார். அதை அடிப்படையாக வைத்து வருங்காலத்திலே அது குறித்து அரசு பரிசீலிக்க முடியும்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

வனச் சரக அலுவலகம்

***29688-திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, போளூரில் புதிய வனச் சரக அலுவலகம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போளூர் வனச் சரக அலுவலகம், போளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. போளூரில் வனத் துறைக்குச் சொந்தமான நிலம் இல்லாத காரணத்தால், வனச் சரக அலுவலகம் கட்டுவதற்குத் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நிலம் கோரப்பட்டுள்ளது. நிலம் கிடைக்கப்பெற்றபின், கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.*

வினா எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS